# கொள்வனவு அறிவித்தல்

## இலங்கை கடற்படை

### இலங்கை கடற்படைக்கு 2020ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 01ஆம் திகதியில் இருந்து டிசம்பர் மாதம் 31ஆம் திகதி வரைக்குமான மருத்துவ பொருட்களை விநியோகித்தல் தொடர்பாக உற்பத்தியாளர்கள், இறக்குமதியாளர்கள், வழங்குநர்கள், ஒப்பந்தக்காரர்களிடமிருந்து ஒவ்வொரு அலகுக்குமான விலைகளின் கீழ் கேள்வி கோருதல்

1. இலங்கை கடற்படைத் திணைக்களத்தின் கொள்வனவு குழுத் தலைவரினால் கீழே குறிப்பிடப்படும் இலங்கை கடற்படைத் தளங்களுக்கும், நிறுவனங்களுக்கும் 2020ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 01ஆம் திகதியில் இருந்து 2020 டிசம்பர் மாதம் 31ஆம் திகதி வரைக்குமான காலப்பகுதிக்கு கீழே குறிப்பிடப்படும் வேறு வேறு மருத்துவ பொருட்கள் ஒன்றையோ அல்லது அதற்கு மேற்பட்ட பொருட்களையோ ஒவ்வொரு அலகுக்குமான விலைகளின் கீழ் விநியோகிப்பதை உறுதி செய்யக்கூடிய இலங்கையின் வர்த்தக நிறுவனங்கள், இறக்குமதியாளர்கள் உற்பத்தியாளர்கள், ஒப்பந்தக்காரர்கள் போன்ற வழங்குநர்களிடமிருந்து விலைகள் கோரப்படுகின்றன. ஒவ்வொரு அலகுக்குமான விலைகளின் கீழ் சமர்ப்பிக்கும் விலைகளின் செல்லுபடியாகும் காலம் 2020ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 01ஆம் திகதி தொடக்கம் 2020 டிசம்பர் மாதம் 31ஆம் திகதி வரையிலாகும்.

   (அ) தெரிவு செய்யப்பட்ட வழங்குநர்களினால் குறித்த மருத்துவ பொருட்களை மருத்துவ களஞ்சியசாலை, இலங்கை கடற்படை தலைமையகம், த.பெ. எண் 593, கொழும்பு-01 என்ற முகவரிக்கு ஒப்படைக்கப்படல் வேண்டும்.

   (ஆ) இது தொடர்பாக ஆர்வமுள்ளவர்கள் ஒவ்வொரு வகையறாவுக்குமான மீளளிக்கப்படாத விண்ணப்பக் கட்டணமான ரூபா 2000.00 ஐ காசாக பணிப்பாளர் (நிதி), இலங்கை கடற்படைத் தலைமையகம், த.பெ. எண் 593, கொழும்பு-01. என்பவரிடம் செலுத்தி பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை 2019 செப்டெம்பர் 23இல் இருந்து 2019 அக்டோபர் மாதம் 22 வரை வாராந்த வேலை நாட்களில் காலை 10.00 மணி தொடக்கம் 14.00 மணிக்கும் இடைப்பட்ட காலத்தில் பெற்றுக்கொள்ள முடியும். உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்ட பொது மருத்துவ பொருட்களை கொள்வனவு செய்வதற்கான விண்ணப்பப் படிவங்களை கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு சமர்ப்பிக்க வேண்டும்.

2. 2020ஆம் ஆண்டுக்கு ஒவ்வொரு நிறுவனத்துக்குமான தேவைகளின் அளவுகள் மற்றும் விபரங்கள் ஒவ்வொரு வகையறாவின் கீழும் தேவைப்படும் அளவுகள் விண்ணப்பப்படிவத்துடன் வழங்கப்படும்.

**கேள்விப்பத்திர இலக்கங்களும் ஒவ்வொரு வகையறாவும்**

| விடயங்களின் வகைப்படுத்தல் இலக்கம் | விடயங்களின் வகைப்படுத்தல் விடய விபரம் | முடிவுத் திகதியும் பத்திரங்களை திறக்கும் திகதியும் நேரமும் |
|---|---|---|
| இகப/சீஎம்எஸ் /01/ஆர்சீ/2019 | நோய்க்கான மருந்துகள் | 2019 அக்டோபர் 23, 10.00 மணி |
| இகப/சீஎம்எஸ் /02/ஆர்சீ/2019 | இதய நோய்க்கான மருந்துகள் | 2019 அக்டோபர் 23, 10.00 மணி |
| இகப/சீஎம்எஸ் /03/ஆர்சீ/2019 | மைய்ய நரம்பு நோய்க்கான மருந்துகள் | 2019 அக்டோபர் 23, 10.00 மணி |
| இகப/சீஎம்எஸ் /04/ஆர்சீ/2019 | ஊட்டச்சத்து மற்றும் இரத்த வளர்ச்சிக்கான மருந்து | 2019 அக்டோபர் 23, 10.00 மணி |
| இகப/சீஎம்எஸ் /05/ஆர்சீ/2019 | சுவாச நோய்க்கான மருந்து | 2019 அக்டோபர் 23, 10.00 மணி |
| இகப/சீஎம்எஸ் /06/ஆர்சீ/2019 | இரைப்பை நோய்க்கான மருந்து | 2019 அக்டோபர் 23, 10.00 மணி |
| இகப/சீஎம்எஸ் /07/ஆர்சீ/2019 | கண் /காது/மூக்கு மற்றும் தொண்டை நோய்க்கான மருந்து | 2019 அக்டோபர் 23, 10.00 மணி |
| இகப/சீஎம்எஸ் /08/ஆர்சீ/2019 | தோல் நோய்க்கான மருந்து | 2019 அக்டோபர் 23, 10.00 மணி |
| இகப/சீஎம்எஸ் /09/ஆர்சீ/2019 | நூளமில்லா நோய்க்கான மருந்து | 2019 அக்டோபர் 23, 10.00 மணி |
| இகப/சீஎம்எஸ் /10/ஆர்சீ/2019 | தசை மற்றும் மூட்டு நோய்க்கான மருந்து | 2019 அக்டோபர் 23, 10.00 மணி |
| இகப/சீஎம்எஸ் /11/ஆர்சீ/2019 | மருந்தூசி மற்றும் ஊசி | 2019 அக்டோபர் 23, 10.00 மணி |
| இகப/சீஎம்எஸ் /12/ஆர்சீ/2019 | டிரஸ்ஜிங் பொருட்கள் | 2019 அக்டோபர் 23, 10.00 மணி |
| இகப/சீஎம்எஸ் /13/ஆர்சீ/2019 | கன்னுல மற்றும் வடிகுழாய்கள் | 2019 அக்டோபர் 23, 10.00 மணி |
| இகப/சீஎம்எஸ் /14/ஆர்சீ/2019 | நுகர்வோர் சாதனங்கள் | 2019 அக்டோபர் 23, 10.00 மணி |
| இகப/சீஎம்எஸ் /15/ஆர்சீ/2019 | தையல் பொருட்கள் | 2019 அக்டோபர் 23, 10.00 மணி |
| இகப/சீஎம்எஸ் /16/ஆர்சீ/2019 | பிற அறுவை சிகிச்சை நுகர்வோர் பொருட்கள் | 2019 அக்டோபர் 23, 10.00 மணி |
| இகப/சீஎம்எஸ் /17/ஆர்சீ/2020 | எக்ஸ்ரே படங்கள் பெறப் பயன்படுத்தப்படுகின்ற பொருட்கள் மற்றும் இரசாயன கருவிகள் | 2019 அக்டோபர் 23, 10.00 மணி |
| இகப/சீஎம்எஸ் /18/ஆர்சீ/2020 | பூச்சி கட்டுப்பாட்டுக்கான இரசாயனப் பொருட்கள் | 2019 அக்டோபர் 23, 10.00 மணி |
| இகப/சீஎம்எஸ் /19/ஆர்சீ/2019 | இரத்தக்கட்டு பகுப்பாய்வுக்கான சோதனைப் பொருட்கள் | 2019 அக்டோபர் 23, 10.00 மணி |
| இகப/சீஎம்எஸ் /20/ஆர்சீ/2019 | இரத்த அயனுக்கான பகுப்பாய்வுக்கான சோதனைப் பொருட்கள் | 2019 அக்டோபர் 23, 10.00 மணி |
| இகப/சீஎம்எஸ் /21/ஆர்சீ/2019 | அளவை நாடா மற்றும் பல்வேறு பொருட்கள் | 2019 அக்டோபர் 23, 10.00 மணி |
| இகப/சீஎம்எஸ் /22/ஆர்சீ/2019 | சோதனை குழாய்கள் | 2019 அக்டோபர் 23, 10.00 மணி |
| இகப/சீஎம்எஸ் /23/ஆர்சீ/2019 | நோய்தடுப்பு மதிப்பீட்டு சோதனை பொருட்கள் | 2019 அக்டோபர் 23, 10.00 மணி |
| இகப/சீஎம்எஸ் /24/ஆர்சீ/2019 | இரத்த எரிவாய்வு பகுப்பாய்வுக்கான சோதனை பொருட்கள் | 2019 அக்டோபர் 23, 10.00 மணி |
| இகப/சீஎம்எஸ் /25/ஆர்சீ/2020 | Semi Automated Bio Chemistry Analyzer Reagent | 2019 அக்டோபர் 23, 10.00 மணி |
| இகப/சீஎம்எஸ் /26/ஆர்சீ/2019 | கண்ணாடிகள் மற்றும் லென்ஸ்கள் | 2019 அக்டோபர் 23, 10.00 மணி |

3. ஒப்பந்தக்காரர்கள் பின்வரும் தகைமைகளை பூர்த்தி செய்ய வேண்டும். (விலைகளை விமர்சிக்கும் போது இவ்விடயங்கள் கவனத்தில் கொள்ளப்படும்.)
   - i. அரச நிறுவனங்களுக்கு களஞ்சியப் பொருட்களை சிறப்பான முறையில் விநியோகித்தமை தொடர்பான 2 வருட அனுபவம்.
   - ii. வாசனை சாதனங்கள் மற்றும் மருந்து ஒழுங்கு முறை ஆணையத்தால் வழங்கப்பட்ட தகுதி சான்றிதழ்.
   - iii. நிலையான மூலதன வசதிகள்.
   - iv. ஒழுங்காக வரி செலுத்தியமைக்கான அறிக்கை.
   - v. போதுமான தொடர்பாடல் வசதிகள் (தொலைபேசி, கையடக்கத் தொலைபேசி, தொலைநகல், மின் அஞ்சல்).
   - vi. போதுமான களஞ்சியசாலை வசதிகள்.
   - vii. போதுமான தொழிலாளர் மற்றும் அலுவலக வசதிகள்.
   - viii போதுமான வகையில் போக்குவரத்து வாகன வசதிகள்.
   - viii. வர்த்தக நிறுவனமாக பதிவு செய்து கொண்டுள்ள சான்றிதழ் அல்லது நிறுவன ரீதியாக ஒன்றிணைந்து செயற்பட்டமை தொடர்பான சான்றிதழ் சமர்ப்பிக்கப்பட வேண்டும். 3 வருடத்துக்கு மேற்பட்ட காலப்பகுதியில் தொடர்ந்து வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டமைக்கான சான்றுகளை சமர்ப்பிக்க வேண்டும்.

4. விண்ணப்பதாரிகள் விலைகளை சமர்ப்பிக்கப்படும்போது பெறுமதி சேர்க்கப்பட்ட வரி (VAT) செலுத்துபவராக பதிவு செய்த இலக்கத்தை சமர்ப்பித்தல் கட்டாயமாகும். இவ்வாறு பதிவு செய்து கொள்ளாத விண்ணப்பதாரிகள் வரி விலக்களிக்கப்பட்டமை தொடர்பாக இறை வரித் திணைக்கள ஆணையாளரின் சான்றிதழை சமர்ப்பிக்க வேண்டும். மேலும் மேற்குறித்த தேவைகளை பூர்த்தி செய்யாத கேள்விப்பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.

5. விண்ணப்பதாரிகள் விலைகளை சமர்ப்பிக்கப்படும்போது கடித அட்டையின் இடது பக்க மேல் மூலையில் **"இலங்கை கடற்படைக்கு 2020ஆம் ஆண்டுக்கான களஞ்சியப் பொருட்களை விநியோகிப்பதற்கான ஒப்பந்த விலைகளை சமர்ப்பித்தல்"** (விடய விபரம்.........................) இகப/வழங்கல்/............ /ஆர்சீ /2020 கேள்விப்பத்திரப் பெட்டியில் (டெண்டர்) விண்ணப்பங்கள் திறக்கும் திகதி, நேரம் குறிப்பிட்டு பதிவுத் தபாலில் கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்ப வேண்டும். அல்லது குறித்த கேள்விப்பத்திரப் பெட்டியில் (டெண்டர்) இட வேண்டும்

   **தலைவர்,**
   **திணைக்களக் கொள்வனவுக்குழு,**
   **இலங்கை கடற்படை**
   **இலங்கை கடற்படை தலைமையகம்,**
   **த.பெ. எண் 593, கொழும்பு-01.**

6. குறித்த நேரம் முடிவடைந்த உடனேயே கேள்விப்பத்திரம் திறக்கப்படும். பிந்திக் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுவதுடன், அவை திறக்கப்படாமலேயே திருப்பிக் கொடுக்கப்படும். விண்ணப்பதாரிக்கோ அல்லது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிக்கோ கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும் இந்த சந்தர்ப்பத்திற்கு சமுகமளிக்க முடியும்.

7. உரிய முறையில் பூர்த்தி செய்யப்படாத விலைகோரல் ஆவணங்கள், உரிய எழுத்து மூல சான்றுகள் சமர்ப்பிக்கப்படாத பட்சத்தில் கேள்விப் பத்திரங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பங்களை ஏற்றல் அல்லது நிராகரித்தல் கேள்விச் சபைச் தலைவரின் அதிகாரத்துக்குட்பட்டது.

8. தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகளுடன் ஒப்பந்தம் கைச்சாத்திடல் தொடர்பாக பதிவுத் தபாலில் அறிவிக்கப்படும்.

9. கேள்விப் பத்திர விண்ணப்பங்களை எதுவித கொடுப்பனவுகளும் இன்றி பணிப்பாளர் நாயகம் (வழங்கல் மற்றும் சேவைகள்), இலங்கை கடற்படைத் தலைமையகம், கொழும்பு. என்னும் இடத்தில் பரிசீலிக்க முடியும்.

10. மேலதிக விபரங்களுக்கு பணிப்பாளர் அதிகாரி (மருத்துவ சப்ளையர்கள்) தொலைபேசி 011-2215541, பணிப்பாளர் கடற்படை வழங்கல் தொலைபேசி 011-2212321 மற்றும் பதில் பணிப்பாளர் நாயகம் வழங்கல் தொலைபேசி 011-2334995 எண்களுக்கு தொடர்பு கொள்ளவும்.

11. இக்குறிப்பிட்ட ஒவ்வொரு வகையறாவுக்குமான விலைக்கோரல் தொடர்பான விபரங்களை கடற்படையின் இணையத்தளமான www.navy.lk யிலிருந்தும் பெற்றுக்கொள்ள முடியும்.

**தலைவர்,**
**திணைக்களக் கொள்வனவுக்குழு,**
**இலங்கை கடற்படை,**
**கொழும்பு-01**